# நற்றிணைப் பாடல்களின் குறிப்புப் பொருளும் ஃப்ராய்டியக் கோட்பாடும்

*இ. லெட்சுமி*
*ஆய்வியல் நிறைஞர்*
*சக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*ஒட்டன்சத்திரம்*

**முன்னுரை**

தமிழிலக்கிய ஆய்வுக்களம் டிவரலாற்றுச் சிறப்புமிக்கது. சங்க இலக்கியம் பண்டைய தமிழ் நாகரிகம், மொழிச்சிறப்பு முதலானவற்றை அறிய விரும்புவோருக்குச் சான்றாகவும், செய்தி ஊற்றாகவும் அமைகிறது. பிளட்டோ 'இலக்கியம் போலிமயமானது, வாழ்க்கையிலிருந்து மும்மடங்கு விலகிவிட்டது' என்று கூறுகின்றார். ஆனால் அரிஸ்டாட்டில் 'இலக்கியம் தீட்டப்படும் வாழ்க்கை தற்சார்பற்ற முறையில் போண்மைப்பண்பால் புலப்படுத்துவது கற்பனைத் திறனால் வாழ்க்கையை மறுபடைப்பாக விளக்குவது இலக்கியம்' என்கிறார். தமிழிலக்கிய ஆய்வுலகம் அரிஸ்டாட்டிலின் கருத்தை ஏற்றுக் கொள்கின்றது. இலக்கியம் சமுதாயத்தை வெளிப்படுத்தும் படிமக்கலங்கள் என்று கா.சிவதம்பி, க.கைலாசபதி போன்ற அறிஞர் கருதுவர். இப்பின்புலத்திலேயே தமிழிலக்கிய ஆராய்ச்சி வளர்ச்சியில் தமிழியியல் ஆய்வுகள் பல்வேறு பரிமாணங்களைப் பெற்றது. அத்தகைய பரிமாணங்களில் ஒன்றுதான் உளவியல் அணுகுமுறையாகும். தமிழிலக்கியத்தில் இலக்கியக்கொள்கையை உருவாக்கியவர் தொல்காப்பியர். மனிதமனங்களின் தன்மைகளை உணர்ந்து ஆய்வுநடத்தி உளவியல் கோட்பாட்டை உருவாக்கிவர் ∴ப்ராய்டு. இவ்விருவருக்கமான கோட்பாடுகளில் இணைநிலையாக அமைவது குறிப்புப்பொருளும், கனவுநிலைக் கோட்பாடும் ஆகும். அந்த வகையில் நற்றிணைப் பாடல்களில் உள்ள குறிப்புப்பொருளான உள்ளுறை, இறைச்சியை கனவுநிலைக் கோட்பாட்டுடன் ஒப்பிட்டு, உளவியல் அணுகுமுறையைக் கொண்டு ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**உளவியல்**

உளவியல் என்பது மனிதனின் நடத்தை பற்றிய அறிவியல் துறையாகும். மனிதனின்நடத்தையை நிர்ணயிப்பதும், அவன் உள்ளத்தில் புதைந்து கிடப்பனவற்றைப் புரிந்துகொள்வதுமே உளப்பகுப்பாய்வாகும். இலக்கியம் மனிதனின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது. அது மனித மனத்தின் செயல்பாடுகளை வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு எழுத்தாளனின் படைப்புகளும் அவனது அனுபவங்களின் வெளிப்பாடாகும். இந்நிலையில் இலக்கியமும் உளவியலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் விளங்குகின்றன. "மனித உள்ளத்தைப் பற்றிய ஆய்வில் இலக்கியமும் உளவியலும் வெவ்வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றுகின்றன. எனினும் அவற்றின் கருவாக அமைந்திருப்பது மனித உள்ளமே" என வை.சச்சிதானந்தன் குறிப்பிடுகின்றார். சங்க இலக்கியத்தில் அகத்திணைப் பாடல்கள் அனைத்துமே உள்ளத்து உணர்வுகளின் மொழி வெளிப்பாடுகளாகும். ரெனிவெல்லாக்கின் கூற்றுப்படி இலக்கிய உளவியலை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். 1.)படைப்பாளி உளவியல், 2.)படைப்பாக்கஉளவியல், 3.)இலக்கிய உளவியல், 4.)அவையினா; உளவியல். படைப்பாக்கஉளவியல் என்பது ஒரு படைப்பாளியின் உளவியலுக்கும், அவன் படைப்பின் உருவாக்கத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை அறிய முற்படுவதாகும். எது ஒருவனை படைப்பாளி ஆக்குகின்றது? அவனுக்கு அகத்தெழுச்சி (Inspiration) எவ்வாறு உண்டாகிறது என்ற கேள்விகள் உளவியல் சார்ந்தவையாகும்.

உளவியல் செயற்பாட்டின் முப்பெருங் களங்களாவன.

id :உள்ளுணர்ச்சித் துடிப்புகளின் உலைக்களன்.

The super ego: சமூக அபத்தங்களுக்கேற்ப 'இட்' மீது அகத்தணிக்கையைப் பயன்படுத்தும் மனக்களம்.

Ego: புற உலகின் தொடர்பினால் செப்பனிடப்பட்ட (id) ன் கூறாகும். நனவு மனம் அமுக்கம் மற்றும் உயர்வழிப்படுத்தல் ஆகிய இரண்டும் ஈகோவின் தற்காப்பு முறை.

நனவிலியின் இயல்புதான் சொல்லாடல்களின் இலக்கண வரம்பு ஆகும். நனவிலி ‘மொழி’ போன்ற கட்டமைப்பு கொண்டது (unconscious is structural like the language). நனவிலி என்பது மனிதன் பிறந்தவுடனேயே வேட்கைகள் அதில் அமுக்கப்படுகின்றன. அவை உருவங்களாகப் பதிவாகின்றன. உருவகத் தன்மையோடு (Metaphorical nature), உருவக மொழியாக (Metaphorical language) இச்சொல்லாடல்கள் அமைகின்றன. அகஇலக்கியங்களில் காணப்படும் உள்ளுறையும் இறைச்சியும் நனவிலியின் உருவகத்தன்மைக் கொண்டது. “அமுக்கப்பட்டவேட்கைகளும் அவற்றின் வகைக்கெழுக்களும் திரிபுவடிவில் மட்டும் வெளிப்பட அனுமதிக்கப்படுகின்றன. இத்தகு கனவுத் திரிபுருவாக்கங்களை அறிவியல் பூர்வமாகத் தெளிவாக்கிக் கொண்டால் இராக் கனவுகள் எல்லாம் விருப்ப நிறைவேற்றங்கள் என்பதை ஏற்பதில் எவ்விதச்சிரமமும் இல்லை. இதே வழியில் பகற்கனவுகளும் புனைவுகளும்விருப்ப நிறைவேற்றங்களாகின்றன” என்ற ஃப்ராய்டின் கூற்றிற்கேற்ப உள்ளுறை, இறைச்சியை கனவு நிலைக் கோட்பாட்டுடன் இணை நிலையாக ஒப்பிடப்படுகிறது.

**தொல்காப்பியத்தில் குறிப்புப் பொருள்**

தொல்காப்பியரே இலக்கியத்தில் குறிப்புப்பொருள் பற்றி முதலில் கூறியவர். இக்குறிப்புப் பொருள்கள் சங்கப் புலவர்களின் மிகப்பெரிய கொடை. அவர்களின் நுண்ணறிவின் வெளிப்பாடுகளாக உள்ளுறையும், இறைச்சியும் விளங்குகின்றன. இவ்விரண்டு குறிப்புப்பொருட்களின் வித்தாகக் ‘காதல் உணர்ச்சி’ அமைகின்றது. எனவேதான் அகத்திணைக்குக் குறிப்புப்பொருளைத் தொல்காப்பியர் பொருத்தியிருக்கின்றார். கவிதையில் புலவன் தான் சொல்லவரும் கருத்தைச் சிறிதும் பிறழாமல் வாசகன் பெறும் வண்ணம் புனையவேண்டும். அந்த அளவிற்குச் செறிவானக் குறிப்புப்பொருள்களை படைக்கவேண்டும். இதனை,

**உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்**
**கொள்ளும் என்ப குறி அறிந்தோரே (தொல்.993)**

**உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென**
**உள்ளுறுத்து உரைப்பது உள்ளுறை உவமம் (தொல்.994)**

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் தெய்வம் நீங்கலான ஏனைய கருப்பொருள்களை தனக்கு இடமாகக் கொண்டு உள்ளுறை தோன்றும் என்கிறார். உவமத்தைத் தொல்காப்பியர் உள்ளுறை உவமம், ஏனைய உவமம் என இரண்டாகப் பகுக்கின்றார். ஏனைய உவமம் என்பது கவிதையில் கிடைக்கும் சொற்களை தம்மைத்தாமே வெளிப்படையாகப் பொருளை உணா;த்தி நிற்பதாகும். உள்ளுறை உவமம் என்பது வெளிப்படையாக அன்றி உவமை போன்று அமைந்து, அதற்கு ஒப்பான வேறு பொருளை நுண்ணறிவால் சிந்தித்துப் பெறவேண்டிய அல்லது முடிகிற பொருள்கோள் உத்தியாகும். புலவனின் அறிவுத்திறம் சிறப்பிற்குரியது என்பதை உணர்த்தவே ‘உள்ளுறுத்து’ எனும் சொல்லைத் தொல்காப்பியர் சுட்டுகிறார்.

**இறைச்சியின் பிறக்கும் பொருமார் உளவே**
**திறந்து இயல் மருங்கின் தெரியு மோர்க்கே” (தொல்.1176)**

என்ற நூற்பாவில் இறைச்சிப் பொருளென்பது உள்பொருளின் புறத்தாகித் தோன்றும் பொருள் என்கிறார். கருப்பொருளுக்குப் புறத்தே இருக்கும் உரிப்பொருளைக் கண்டுகொள்கிற இலக்கிய வகைமை என முத்துசாமி குறிப்பிடுகிறார். கா.செல்லப்பன் “உள்ளுறைக்கும் இறைச்சிக்கும் இடையே பொருள் கொள்வதில் வேறுபாடு உள்ளது. உள்ளுறையைப் பகுதிப் பகுதியாகத் தான் பொருத்த வேண்டும்.இறைச்சியை ஒட்டு மொத்தமாகப் பொருத்துகின்றோம். உள்ளுறையில் ஒவ்வொரு பொருளுக்கும் படிமம் இருக்கும். இறைச்சியில் மொத்த உணர்ச்சியே இருக்கும். உள்ளுறை சொற்களுக்குள் அடங்கும். ஆயின் இறைச்சி சொற்களைக் கடந்து நிற்கும் என்கிறார்”. தமிழண்ணல் “உள்ளுறையில் கருப் பொருட்கள் ஒப்புறவுக் குறியீடுகளாகின்றன. இறைச்சியில் முழுக்கவிதையே குறியீடாகின்றது” என்கிறார். உள்ளுறைப் பொருளும் இறைச்சிப் பொருளும் வாசகன் நிலைக்குரியவை. பொருள்கோள் (Hermeneutics) வட்டத்திற்கு உட்பட்டவை.

**ஃப்ராய்டியக் கோட்பாடும் குறிப்புப் பொருளும்**

தொல்காப்பியர் இலக்கியத்தை அகம் புறம் எனப்பகுக்கின்றார். காதல், வீரம் இரண்டையே பாடுபொருட்களாகக் காட்டுகிறார். உள்ளங்களை அலசிய ஃப்ராய்டு மனித உள்ளுணர்ச்சிகள் என்று காமத்தையும் (sex), மூர்க்கத்தையும் (aggression) காட்டுகிறார். இந்தப் பாலுணர்ச்சியும் மூர்க்க உணர்ச்சியும் நனவிலியின் ஆதிக்க உணர்ச்சிகளாக இருப்பதைச் சுட்டுகிறார். இவ் உணர்ச்சி அகத் தூண்டல் பெற்றுக் கனவு வெளிப்படுவது போல கலை இலக்கியங்கள் வெளிப்படுகின்றன. கனவு முதல் கலை வரையிலான மனித உளப்படைப்புகள் அனைத்திலும் பாலுணர்ச்சி பரவலாக இருப்பதைச் சான்றுடன் ஃப்ராய்டு விளக்குகின்றார். சமூகங்களால் பாலுணர்ச்சி ஒடுகுதலுக்கு ஆளாகின்றது. இதனால் அமுக்கப்பட்ட பாலுணர்ச்சி அன்பென இடப்பெயர்வாகிக் காதலாகிறது. உளப்பகுப்பாய்வு நோக்கில் குறிப்புப் பொருட்கள் எல்லாம் மறைமனமான நனவிலியின் வெளிப்பாடுகளாகும். அவ்வகையில் உள்ளுறை இறைச்சி நனவிலியோடு தொடர்புடையதாகின்றன. இலக்கிய வெளிப்பாடுகளை ஃப்ராய்டு பகற்கனவோடு தொடர்புபடுத்துகிறார். கவிதையை மட்டும் இராக்கனவுடன் இணைத்துப்பேசுகிறார். இரண்டும் புனைவு வடிவங்கள் என்றாலும் பகற்கனவை விட இராக் கனவில் இருண்மை மிகுதி. உள்ளுறை இறைச்சிப் பாடல்களில் இருண்மை மிகுதி. இக்குறிப்புப் பொருட்கள் இராக் கனவின் மொழியாடல்கள். அந்தளவுக்குக் குறிப்புப் பொருள்களில் படிமங்கள் இருண்மைத் தனமாகக் கையாளப்பட்டிருகின்றன.

**கவிதையும் கனவுநிலையும்**

தொல்காப்பியர் செய்யுள் என்று கூறுவது 'உள்ளொன்று வைத்துச் செய்வது' என்கிற பொருளை உணர்த்துகிறது. ஆனால் ஃப்ராய்டு கவிதையையும் கனவுநிலையும் ஒன்றாகக் காணும் நிலை உள்ளது. உளப்பகுப்பாய்வில் கனவிற்கு உறைவு, இடப்பெயர்வு, குறியீட்டாக்கம் ஆகிய மூன்றையும் காட்டுகிறார். உறைவு (condensation) கனவுக்கு முதன்மையானது என்கிறார். கனவு இருண்மையாக இருப்பதால் மாயை போல் தோன்றுகின்றது. உறைவு காரணமாக எளிதில் புரிந்துகொள்ள இயலாத நுண்மையான வடிவில் கனவுகள் வெளிப்படுவதால் கவிதைத் தனத்துடன் இணைக்கின்றார் ஃப்ராய்டு. கவிதை மேலோட்டமான நிலையிலிருந்து இருண்மையானது என பலதரப்பட்ட நிலைகளில் உள்ளன. கவிதைகளில் படிமங்களாக அமைவது உவமை, உருவகம் ஆகியன இடப்பெயர்வு ஆகும். இதனை ஒரு விதத்தில் பதிலீட்டு உருவாக்கம் (subsutitute formation) எனலாம். குறியீட்டாக்கம் என்பது புலவன் x கவிஞன் திட்டமிட்டுக் குறியீடுகளை உருவாக்குவதாகும். குறியீட்டமைவு என்பது படைப்பு வழியில் தானறியாமல் இயல்பாகக் குறியீடுகளாகின்றன. இலக்கியங்களில் இவ்விரண்டு நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. நனவுநிலை (conscious) ஆக்கங்களான உள்ளுறையும் இறைச்சியும் ஃப்ராய்டிய நோக்கில் இராண்டாம்நிலை படிமுறை (sencondary process) ஆக்கங்களாகின்றன. முதல்நிலைப் படிமுறை நனவில் ஒழுங்கமைவின் பண்பாகவும், இராண்டாம்நிலைப் படிமுறை நனவு-நனவடங்கு ஒழுங்கமைவின் பண்பாகவும் அமைகின்றன.

**உள்ளுறை உவமம்**

புலவன் ஒரு கருத்தை உள்ளத்தில் கருதிக்கொண்டு அக்கருத்தோடு வெளிப்படையாகச் சில கருப்பொருட்கள் ஒன்றுபட்டு அவற்றிள் உள்வைத்து முடிக்கப்படுவதே உள்ளுறை உவமம் எனப்படும். நற்றிணைப் பாடலில் உள்ளுறைப் பொருண்மை கடந்து கனவுப் பொருண்மை இருப்பதை ஃப்ராய்டியம் வழி உணரலாம். உள்ளுறை என்பது புலவனின் கனவு ஊக்கப்பாட்டின் வெளிப்பாடாகும். உள்ளுறைப் பாடலில் புலவனின் இரண்டு ஊக்கப்பாடுகளும் ஒன்றிப்பாகின்றன. நனவுநிலை ஊக்கப்பாட்டினை புலவன் அறிவான். நனவிலி ஊக்கப்பாட்டினை புலவனால் அறியமுடியாது. உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டைக் கொண்டே அறியமுடியும்.

**கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை**
**முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி**
**கல்லாக் கடுவனொடு நல்வரை யேறி**
**அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டுதன்**
**திரையணற் கொடுங்கவுள் நிறைய முக்கி**
**வான்பெயல் நனைந்த புறந்த நோன்பியர் (நற்.22:1-6)**

என்ற பாடல் குறிஞ்சித் திணையில் தோழிக் கூற்றாக வருகின்றது. தலைவன் களவொழுக்கத்தை விடுத்து விரைவில் தலைவியை மணந்து கொள்ளக்கூடிய காலத்தைக் கூறுகின்றார். முன்பொரு காலம் கார்காலம் வருவதாகக் கூறிச்சென்று தலைவன் வரவில்லை. ஆனால் இன்று மெய்யாகவே மணஞ்செய்துகொள்ள வந்துள்ளதாக கூறினாள். அப்படிக் கூறும்போது மலைப்பக்கத்தில் கொடிச்சியால் காக்கப்படும் பசிய தினைப்பயிரினை முதலிலே பறித்து முற்றிய பெருங்கதிர்களை கொய்து கொண்ட மந்தி, பாய்தலை தவிர வேறு தொழிலறியாத கடுவனுடன் சேர்ந்து மலைமீதேறி தினைக்கதிர்களை கசக்கி உண்ணும். திடீர் மழை பெய்வதால் நனைந்த இணைக்குரங்குகள் நோன்பிருந்து பின் உண்பது போல உண்ணும் மலை நாடனே என்கிறார். உலகத்து நீர் நிலை வற்றிப் போய் நெற்பயிர் வாடியிருந்தாலும் நடுயாமத்து மழை பெய்தாற் போல தலைவன் வந்து விரைவில் வதுவை அயர்வான். அதனை,

**மந்தி - தலைவி**
**கடுவன் - தலைவன்**
**முற்றிய தினைபயிர் - களவொழுக்கம் முடிந்து**
**கற்பொழுக்கம்(இல்லறம்)**
**வம்பமாரி - தலைவன் வரைவு**
**நடுயமாத்து மழை - தலைவனின் அன்பு**

என உரையாசிரியர்கள் பகுக்கின்றனர். ஃப்ராடிய நோக்கில் விருப்பம் புதைந்திருப்பதைப் பகுப்பாய்வு செய்வதன் வழி

1. மலைப்பக்கத்திலுள்ள தினைக் கொல்லை
2. மந்தி, கடுவனோடு தினைக்கதிர் உண்ணுதல்
3. வம்ப மாரியில் நனைதல்
4. நீர் நிலைகள் நீர் வற்றியதால் நெற்பயிர் வாடுதல்
5. நடுயாமத்து மழைப் பொழிவு

என்ற இப்பகுப்பில் கடுவன், மந்தி, தினை, கொடிச்சி, மலை, நெற்பயிர் முதலிய கருப்பொருட்கள் இடம் பெறுகின்றன. இக்கருப்பொருட்கள் இயங்கு முறையால் காட்சியாகப் பிறக்கின்றன. இக்காட்சியில் வரும் படிமம் குறிப்புப் பொருளை உருவாக்குகின்றது. இதில் மந்தி-தலைவி, கடுவன்-தலைவன், விளைந்த தினைக் கதிரை வரையில் வம்பமாரிக்கு பின் உண்ணுதல் இல்லற வாழ்வில் இன்பம் துய்தலுக்கான பாலின்பத்தைக் குறிக்கின்றது. குறிஞ்சி நிலத்தின் உரிப்பொருள் ‘புணர்தல்’ என்பதால் இவ்உள்ளுறை உவமம் பாலின்பத்தை அடிப்படையாகக் கொண்டது. மற்றொரு பாடலில்

**கழுநீர் மேய்ந்த கருந்தாள் எருமை**
**பழனத் தாமரைப் பனிமலர் முணைஇத்**
**தண்டுசேர் மள்ளரின் இயலி அயலது**
**குன்றுசேர் வெண்மணல் துஞ்சும் ஊர (நற்.260:1-4)**

என்ற பாடல் மருதத் திணையில் அமைந்த தலைவி கூற்றாகும். கழுநீர் மலரை மேய்நத பெரிய காலையுடைய எருமை அயலிலுள்ள வயலிலே படர்ந்த தாமரையின் குளிர்ந்த மலரைத் தின்பதனை வெறுத்து விட்டுக் கையிலே தடி கொண்ட வீரரைப் போலச் செருக்கி நடந்து அதன் பக்கத்திலுள்ள குன்று போலக் குவிந்த வெளிய மணலின் மீது துயிலா நிற்கும் ஊரனே என வெளிப்படையான பொருளைக் கொண்டு பாடல் அமையும். அதனை,

**எருமை - தலைவன்**
**தாமரை - தலைவி**
**கழுநீர் - பரத்தை**

என்ற பகுப்பில் பரத்தை ஒழுக்கம் மேற்கொண்டு வந்த தலைவனைத் தடுத்துக் கண்டிக்கின்ற தலைவி ‘குன்று சேர் வெண்மணல் துஞ்சும் ஊரன்’ என்கிறாள். ஊரனுக்கு முன்பேயுள்ள மருத நிலம் தலைவனுக்கு அடையாக வந்துள்ளன. எருமை, தாமரை, கழுநீர் போன்ற படிமங்களும் ஊரின் அடைமொழிகளாகின்றன. சங்க அகப்பாடலில் ஊரன், நாடன் என முடியும் வரிகள் உறைவு செயல் வழியிலானவை. இப்படிமங்கள் தலைவன், தலைவி, பரத்தையின் பண்புகளொத்தவை என்பதால், இவை இடப்பெயர்வுகளாகின்றன. இப்படிமங்கள் பாலின்பத்திற்கான குறியீடுகளாகின்றன.

**இறைச்சி**

தொல்காப்பியர் கூறும் இறைச்சிப் பொருள் இயைபுடையது. இறைச்சி பொருண்மை என்பது உருவகப்படுத்திப் பார்ப்பதன் விளைவாகும். உருவகம் வந்து விட்டால் படைப்பாளி, உரையாசிரியர், வாசகர் முதலியோரின் சிரத்தைகளை அடிப்படையாகக் கொள்வது இயல்பு. தமிழண்ணல் "இறைச்சி என்பது வெறும் கருப்பொருள்களை மட்டும் சுட்டவில்லை. அதன் அடிப்பொருள் முதலில் அதுவேயெனினும் காலப்போக்கில் பாலுணர்வைச் சுட்டலாயிற்று. இறைச்சி என்பது கருப்பொருள்களின் அன்புணர்வு" என்கிறார். அதனை,

**குறிவரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்**
**கன்றுடை வேழம் நின்றுகாத்த அல்கும்**
**ஆரிருள் கடுகிய அஞ்சுவரு சிறுநெறி**
**வாரற்க தில் தோழி சாரல் (நற்.85:4-7)**

என்ற பாடல் குறிஞ்சித்திணையில் அமைந்த தோழிக்கூற்று பாடலாகும். புலிக்கு அஞ்சிய பிடியானை தன் இளங்கன்றைப் பேணி நிற்கும் என்பது இப்பாடலின் வெளிப்படையான பொருளாகும். தலைவனின் பிரிவால் தலைவிக்கு நேரும் துயரத்திற்கு அஞ்சிய தோழி அதனை அறியாது களவுறவில் திளைக்கும் தலைவியைப் பேணிக்காத்து நின்றாள் என்பது குறிப்பாகும். இதனைக் கேட்கும் தலைவன் இரவுக்குறி வாராது தலைவியை விரைந்து மணம் கொள்வான் என்பது இக்கூற்றின் பயனாகும். பிடியானை, இளங்கன்று, புலி போன்ற குறிஞ்சி நிலப்படிமங்களைக் கொண்டுள்ளது.

**பிடியானை - தோழி**
**இளங்கன்று - தலைவி**
**புலியால் வரும் ஏதம் - தலைவன் பிரிவால் ஏற்படும் ஏக்கம்**

இதில் விலங்குகளின் செயல்பாடுகள் பாடலில் வெளிப்படையாகத் தெரியும் படிமமாகும். தலைவன் பிரிவால் தலைவியின் அன்பு ஏக்கம், அதனைத் தோழி ஆற்றுவித்தல் உரையாசிரியாகள் கண்ட குறிப்புப் பொருளாகும். தலைவனுக்கு வரைவு உணர்த்துதல் 'பாலின்பம்' என்பது ஃப்ராய்டிய நோக்கில் கண்ட நனவிலிப் பொருண்மையாகும். ஒரு கனவுப் படிமத்திற்குப் பின்புலமாக நனவடங்கும், நனவிலியும் இருப்பது போல் கவிதைப் படிமத்திற்கும் உண்டு.

**முடிவுரை**

தமிழியல் ஆய்வுகளில் உளப்பகுப்பாய்வு அணுகுமுறை சிறந்ததொரு வளர்ச்சி பெற்ற நிலையில் காணப்படுகின்றது. இலக்கிய கொள்கைகளை உருவாக்கிய தொல்காப்பியரின் குறிப்புப் பொருளுக்கும், உளவியல் பகுப்பு முறையை ஆராய்ந்த ஃப்ராய்டின் கனவுநிலைக் கோட்பாட்டையும் இணைநிலை ஆய்வாகக் கருதுகின்றனர். அந்த வகையில் நற்றிணைப் பாடலில் குறிப்புப் பொருளான உள்ளுறை, இறைச்சி 'காதல்' என்ற பாலின்பத்தை அடிப்படையாகக் கொள்ள பல படிமங்களால் கட்டமைக்கப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**

1. பின்னத்தூர் ஆ.நாராயணசாமி, நற்றிணை
2. பேராசிரியர். தமிழண்ணல், தொல்காப்பியம்
3. ஆஸ்டின் வாரன், ரெனிவெல்லாக், இலக்கியக் கொள்கை
4. பேராசிரியர். தமிழண்ணல், இறைச்சி
5. தி.கு.இரவிச்சந்திரன், சிக்மண்ட் ஃப்ராய்ட் (உளப்பகுப்பாய்வு அறிவியல்)
6. சிக்மன்ட் ஃப்ராய்ட், கனவுகளின் விளக்கம்
7. ச.வின்செண்ட் தமிழில், ஃபிராய்ட் ஜோனத்தன் லியர்